Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: கணிதம்

வாரம் - 10

தரம்: 11

A.M.F. Nazrin
Kegalle Zahira Maha Vidyalaya

## இயல்பொத்த முக்கோணிகள்




உருவில் தரப்பட்டுள்ள முக்கோணி ABC இல் ஒவ்வொரு பக்கத்தின் மீதும் அங்கு தரப்பட்டுள்ள முறையில் P, Q,R ஆகிய புள்ளிகள் அமைந்துள்ள போது கீழே தரப்பட்டுள்ளவாறு விகிதங்களை எழுதலாம்.

(i) $AP : PB = 2:3$, $AP : AB = 2:5$, $PB : AP = 3:2$
(ii) $AQ : QC = 1:5$, $AQ : AC = 1:6$, $QC : AQ = 5:1$
(iii) $BR : RC = 3:3 = 1:1$, $BR : BC = 3:6 = 1:2$, $RC : BR = 3:3$

விகிதத்திலிருந்து பின்னத்தையும் எழுதமுடியுமென்பதை நாம் கற்றுள்ளோம்.

அதற்கேற்ப, $AQ : QC = 1:5$ என்பதை $\frac{AQ}{QC} = \frac{1}{5} = 0.2$ எனவும் எழுதலாம்.

### 14.1 ஒரு முக்கோணியின் இரண்டு பக்கங்களை எஞ்சிய பக்கத்திற்கு சமாந்தரமாக வரையும் ஒரு கோட்டினால் பிரித்தல்

தோற்றம்

ஒரு முக்கோணியில் ஒரு பக்கத்திற்கு சமாந்தரமாக வரையும் கோட்டினால் எஞ்சிய இரண்டு பக்கங்களும் விகிதசமனாகப் பிரிபடும்.



உரு (i)



உரு (ii)



உரு (iii)

**உதாரணம்1**

முக்கோணி $PQR$ இல் பக்கம் $PR$ இற்குச் சமாந்தரமாக $XY$ வரையப்பட்டுள்ளது. $PX = 4cm, XQ = 2cm, YQ = 3cm$ ஆயின் $RY$ யின் நீளத்தைக் காண்க.




$RY$ இன் நீளத்தை x எனக் கொள்வோம்.

அப்போது $PR$ இற்குச் சமாந்தரமாக $XY$ வரையப்பட்டுள்ளதால்,

தோற்றத்தின் படி $\frac{RY}{YQ} = \frac{PX}{XQ}$

அதாவது $\frac{3}{x} = \frac{2}{4}$

$\therefore$ 2x = 4 x 3

$\therefore$ x = 6

$\therefore$ $RY$ இன் நீளம் 6cm ஆகும்

**பயிற்சி 14.1**

1. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொர் உருவிலும் சில நேர்கோட்டுத் துண்டங்களின் நீளங்கள் தெரியாக் கணியங்கள் மூலம் தரப்பட்டுள்ளன. அத்தெரியாக் கணியங்களால் குறிக்கப்படும் பெறுமானங்களைக் காண்க.

